**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2026 P.W. 5/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஷாஜி | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. அர்ஜுனன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது வெண்டலிகோடு முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 09.02.2025ம் தேதி விபத்து நடந்தது சம்பந்தமாக போலீசார் 10.02.2025ம் தேதி மாலை 05.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்து மேப் வரைந்து எழுதினார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகசர் ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

போலீசார் எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் தக்கலை அரசு மருத்துவமனையில் இருக்கும் போது விசாரித்தார்கள். என்னிடம் கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து வாங்கீனார்களா அல்லது மருத்துவனையில் வைத்து வாங்கீனார்களா என்றால் நிலையத்தில் வைத்து வாங்கீனார்கள். நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். அ.சா.1 கவிதா எனக்கு என்ன உறவுமுறை என்றால் துாரத்து சொந்தம்.

நான் சம்பவ இடததிற்கு செல்லவில்லை என்றும், அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2026 P.W. 4/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பிரவின் குமார் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. நாகராஜன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது திருவிதாங்கோடு முகவரியில் வசித்து எலக்ட்ரீக்கல் வேலை செய்து வருகிறேன். கடந்த 09.02.2025ம் தேதி இரவு 10.00 மணிக்கு விபத்து சம்பந்தமாக மூஸ்லிம் கலைக்கல்லூரிக்கு வலது பக்கம் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த பார்வை மகசர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கையொப்பத்தை காவல்நிலையத்தில வைத்து போட்டேனா அல்லது மருத்துவமனையில் வைத்து போட்டேனா என்றால் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். நான் கையொப்பம் செய்த தாளில் எழுதப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். அதில் என்ன எழுதப்பட்டருந்தது என்று படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை ஆனால் சொன்னார்கள்.

விபத்து நடந்த தேதியான 09.02.2025ம் தேதி இரவு 10.00 மணிக்கு நான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். அ.சா.1 கவிதா எனக்கு என்ன உறவுமுறை என்றால் அத்தை ஆவார். அ.சா.1 என் அத்தை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2026 P.W. 3/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.அசின் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ரெகு | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது திருவிதாங்கோடு முகவரியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா ஆவார். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். கடந்த 09.02.2025ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 09.45 மணிக்கு சுவாமியார்மடததில் உள்ள கோவிலுக்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்த போது அழகியமண்டபத்தில் இருந்து நடந்து வந்து கொண்டிருந்தோம். அப்போது மூஸ்லீம் கலைக்கல்லூரி அருகே அப்சல் என்ற நபர் வாகனத்தை அதிவேகமாவும், ஹாரன் அடிக்காமலும், கட்டுப்பாடு இல்லாமல் நாங்கள் நடந்து வந்து கொண்டிருந்த மண் பாதையில் வாகனத்தை ஓட்டி வந்து எங்கள் மீது மோதியதில் என் அம்மாவிற்கு காலிலும் பல்லிலும் அடிப்பட்டது. கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. முதலில் தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் பின்னர் மேல் சிகிச்சைக்காக சாலோம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் . இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. போலீசார் எங்கு வந்து எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். தேதி தெரியவில்லை. அன்றைய தேதியில் எனது தாயார் விளக்கு பூஜைக்கு சென்றுவிட்டு வந்தார் என்றால் ஆமாம்.

பொதுவாக விளக்கு பூஜைக்கு பெண்கள் தான் செல்வார்கள் என்றால் ஆமாம். பாதுகாப்பிற்காக நான் உடன் சென்றேன்.

2. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும்,சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்றும், அ.சா.1 என் அம்மா என்பதால் அவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டி அவருக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2026 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ராதா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. நாகராஜா | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது திருவிதாங்கோடு முகவரியில் வசித்து வீட்டு வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.1 எனது அண்ணனின் மனைவி ஆவார். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். கடந்த பிப்ரவரி மாதம் 09ம் தேதி வருடம் நினைவில்லை இரவு 09.45 மணிக்கு கோவிலுக்கு சென்றுவிட்டு வந்து கொண்டிருந்த போது முஸ்லீம் கலைக்கல்லூரிக்கு அருகில் வரும் போது ஒரு பையன் ஸ்கூட்டியை வேகமாக ஓட்டி வந்து மோதியதில் எனது அண்ணிக்கு பல்லில் அடிபட்டு பல் உடைந்துவிட்டது. காலில் அடிபட்டு எலும்பு உடைந்துவிட்டது. எனது அண்ணியை அவரது மகனும் நானும் தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மேல் சிகிச்சைக்கு மார்த்தாண்டம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. போலீசார் எங்கு வந்து எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் அதே தேதியில் இரவு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. குற்றம்சுமத்தப்பட்ட நபருக்கும் அவரின் மகனுக்கும் TN 74 BF 5014 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனம் இல்லை என்ற

விவரம் தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1 எனது அண்ணி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2026 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. கவிதா | **Taluk** | : | |
| **Father's Name** | : | க/பெ. ரகு | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.07.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது திருவிதாங்கோடு முகவரியில் வசித்து வீட்டில் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். கடந்த 09.02.2025ம் தேதி இரவு 09.45 மணிக்கு நான் விளக்கு பூஜைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது முஸ்லீம் கலைக்கல்லூரிக்கு அருகில் வரும் போது அப்சல் என்ற பையன் இருசக்கர வாகனத்தில் வந்து என் மீது மோதியதில் எனக்கு தொடையில் உள்ள எலும்பு உடைந்துவிட்டது. பல் உடைந்துவிட்டது. அருகில் இருந்தவர்கள் ஆம்புலன்ஸ் மூலமாக தக்கலை அரசு மருத்துவனைக்கு அழைத்துச் சென்றார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக சாலோம் மருத்துவனைக்கு அழைத்துச் சென்றார்கள். நான் மருத்துவனையில் இருக்கும் போது போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள். அப்போது நான் புகார் கொடுத்தேன்.

2. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அந்த நேரத்தில் வாகனத்தினை யார் ஓட்டி வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும் அப்சல் ஓட்டி வந்தார். வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தேனா என்றால் இல்லை. இடித்த பிறகு பார்த்தேன். அந்த வாகனத்தில் எத்தனை நபர்கள் வந்தார்கள் என்றால் தெரியுமா அப்சல் மட்டும் தான் வந்தார். நாங்கள் சென்ற வாகனத்தில் எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் 4 பேர் சென்றோம்.

2. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் ஆமாம், அந்த கடைகளில் ஆட்கள் இருந்தார்கள் என்றால் ஆமாம். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 5 வரையிலான சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். வாகனத்தை ஓட்டி வந்த அப்சல் என்ற பையனுக்கு இருசக்கர வாகனம் TN 74 BF 5014 இல்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அவனுடைய நண்பர் உடைய வாகனம் என்று சொன்னார்கள். அவருடைய குடும்ப நபர்களிடமும் வாகனங்கள் இல்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாது என்றால் சரிதான். மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபரோ, குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மகனோ மேற்படி வாகனத்தினை ஓட்டவில்லை என்றும், வாகனத்தின் உரிமையாளர் தான் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தினார் என்றும், வழக்கிற்காக குற்றம்சுமத்தப்பட்ட நபர் மற்றும் அவருடைய மகனின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .